சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 09.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **6/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-16 |
| சாட்சியின் பெயர் | : | ராதாகிருஷ்ணன் |
| கணவர் பெயர் | : | சக்கரபாண்டியன் |
| கிராமம் | : | காட்டூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | ஓய்வு சிறப்பு உதவி ஆய்வாளர் |
| வயது | : | 60 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 30.09.2022 ஆம் தேதி குடவாசல் காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது திருவாரூர் அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலில் அடிப்படையில் நான் அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த அ.சா-1 ஆனந்த் என்பவரை விசாரணை செய்து அ.சா.ஆ-1 ஆன புகார் வாக்குமூலம் பதிவு செய்து அதில் அவருடைய கையொப்பம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.497/2022 -ல் இதச பிரிவுகள் 294(b), 324, 506(2) உ/இ பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டப்பிரிவு 3(1)(r), 3(1)(s), 3(2)(va) -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ-12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு கோப்பினை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கையை அனுப்பி வைத்தேன். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் முதல் தகவல் மற்றும் முதல் புகார் மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்காக புகார் பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் 1ம் எதிரி சசிகுமார் எங்கள் காவல் நிலையத்திற்கு கடந்த 29.09.2022 ஆம் தேதி வந்து அ.சா-1 ஆனந்த் மீதும் அவரது தகப்பனார் மீதும் புகார் கொடுத்தார் என்று சொன்னால் எனக்கு நியாபகம் இல்லை. இந்த வழக்கு ஆவணங்களில் அது போன்ற குறிப்புகள் எதுவும் இல்லை. நீதிமன்றத்திற்கு அ.சா.ஆ-12 ஆன முதல் தகவல் அறிக்கையினை எப்போது நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் 30.09.2022 ஆம் தேதி அனுப்பி வைத்தேன். யார் மூலம் அனுப்பி வைத்தேன் என்றால்

நீதிமன்றத்திற்கு வரும் காவலர் மூலம் அனுப்பி வைத்தேன். அவர் பெயர் எனக்கு நியாபகம் இல்லை. இந்த அ.சா.ஆ-12 ஆன முதல் தகவல் அறிக்கையை நான் திருவாரூர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அ.சா.ஆ-12 ஆன முதல் தகவல் அறிக்கை கடந்த 03.10.2022 ஆம் தேதி அன்று தான் தஞ்சாவூர் மாவட்ட அமர்வு கூடுதல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. தவறான தகவலின் அடிப்படையில் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்துள்ளேன் என்று சொன்னார் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.09 18:12:35 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.